# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### SAVE BSNL- SAVE INDIA

**சுற்றறிக்கை எண்:10** **தேதி:18.12.2014**

## சென்னை மாநில செயற்குழு முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

BSNLஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயற்குழு நமது மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொதுசெயலாளருமான தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையில் சென்னை கிண்டியில் உள்ள CITU அலுவலகத்தில் 17.12.2014 அன்று சிறப்புடன் நடைபெற்றது.

இந்த மாநில செயற்குழுவில் நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நமது சங்கக் கொடியினை ஏற்றி வைத்தார். மாநில அமைப்பு செயலாளர் தோழர் V.மணியன் தோழர் பாப்பா உமாநாத்தை நினைவு கூர்ந்து அஞ்சலி நிகழ்த்திய பின் மாநில செயற்குழு தாலிபான் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட 132 குழந்தைகள், நீதியரசன் V.R.கிருஷ்ணய்யர், நெல்லை கோபி உள்ளிட்ட தோழர்களுக்கு ஒரு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தியது. BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவி பொருளாளர் தோழர் R.மகேந்திரன் வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

நமது மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா அவர்கள் தலைமையுரை நிகழ்த்திய பின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆய்படு பொருட்களை அறிமுகப்படுத்தி பேசினார்.

அதன் பின் நமது அகில இந்திய சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நமது மாநில செயற்குழுவை துவக்கி வைத்து உரையாற்றினார். அவர் தனது துவக்க உரையில், பாகிஸ்தான் பெஷாவர் நகரில் நடைபெற்ற பள்ளிக்குழந்தைகள் படுகொலையை சுட்டிக் காட்டி மதவெறியின் கொடூரத்தை விவரித்தார். அதுமட்டுமின்றி நமது இந்திய நாட்டிலும் உருவாகி வரும் மதவெறியினை சுட்டிக்காட்டி, மத மோதல்கள் உருவானது என்றால் ஆட்சியாளர்களின் தவறான பொருளாதார கொள்கைக்கு எதிராக உழைக்கும் மக்களை ஒன்று திரட்டுவது சாத்தியமற்றதாகி விடும். எனவே நமது கோரிக்கைகளுக்காக போராட தேவையான மத நல்லிணக்கத்தை பாதுகாப்பதின் அவசியம் என்பதை எடுத்துரைத்தார். மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கவில்லை என சுட்டிக்காட்டினார். தமிழகத்தில் 27.11.2014 வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்று இருந்தாலும் இன்னமும் சக்தியாக நடத்தியிருக்க வேண்டும் என சுட்டிக்காட்டினார். இந்த போராட்டத்தின் அனுபவத்தில் இனிவரும் காலங்களில் வேலை நிறுத்த காலங்களில் இன்னமும் அதிகப்படியான

ஊழியர்களை திரட்டிட வேண்டும் என அறிவுறுத்தினார். நடந்து முடிந்த அகில இந்திய மாநாட்டின் நிகழ்வுகளையும், அந்த மாநாடு நடத்திய மேற்கு வங்க தோழர்களையும் பாராட்டிய அவர் நமது அகில இந்திய மாநாட்டின் முக்கிய கோஷமான தொழிற்சங்க ஒற்றுமை என்பது தற்போது பலப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார். தற்போது FORUM சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் BSNLஐ பாதுகாக்க நடைபெற்று வரும் இயக்கத்தில் நமது பங்கேற்பு மிக அதிக அளவில் இருக்க வேண்டும் என வலியுறுத்தினார். “SAVE BSNL-SAVE INDIA” என்ற பதாகைகளை எடுத்துக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி பொதுமக்களிடம் BSNLஐ காப்பதற்காக கையெழுத்து இயக்கத்தை வெற்றிகரமாக்க வேண்டும் என்றும், தமிழகத்தில் அகில இந்திய FORUM கொடுத்துள்ள இலக்கினை தாண்டி கையெழுத்துக்களை பொதுமக்களிடம் இருந்து பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். 2015 மார்ச்6,7,8 தேதிகளில் நடைபெறும் தர்ணா போராட்டம், ஜனவரியில் நடைபெற உள்ள மாநில அளவிலான கருத்தரங்கம், பிப்ரவரி 25ல் நடைபெற உள்ள ”பாராளுமன்றத்தை நோக்கிய பேரணி” மற்றும் மார்ச் 17 முதல் நடைபெற உள்ள காலவரையற்ற வேலை நிறுத்தம் உள்ளிட்ட போராட்டங்களை வெற்றிகரமாக்கிட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டினார்.

அவரது துவக்க உரைக்கு பின் தமிழகத்தின் அனைத்து மாவட்ட செயலாளர்களும், ஒரு சில மாநில சங்க நிர்வாகிகளும் விவாதத்தில் கலந்துக் கொண்டனர். அதன் பின்னர் நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்களின் வழிகாட்டுதல் அடிப்படையில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன. மாநில செயற்குழுவை தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் A.முகமது ஜாபர் நன்றி கூறி நிறைவு செய்தார்.

01) திருச்சியில் 7ஆவது தமிழ் மாநில மாநாட்டை மிகச்சிறப்பாக நடத்திய திருச்சி மாவட்ட சங்கத்திற்கும், அதில் பணியாற்றிய தோழர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.
02) மேற்கு வங்க ஆளும் கட்சியினரின் பல் வேறு இடையூறுகளையும் தகர்த்தெறிந்து மிக அற்புதமான அகில இந்திய மாநாட்டை அர்ப்பணிப்பு உணர்வுடன் நடத்திய வரவேற்புக் குழுவிற்கும் அவர்களுக்கு மிகச்சிறந்த முறையில் வழிகாட்டிய மத்திய சங்கத்திற்கும் தமிழ் மாநில செயற்குழு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.
03) திருச்சி மாநில மாநாட்டு முடிவான மாநிலந்தழுவிய மதச்சார்பின்மை கருத்தரங்கத்தை ஏப்ரல் முதல் வாரத்தில் மதுரையில் சிறப்பாக நடத்துவது. அதில் அகில இந்திய பொது செயலாளர், உதவி பொது செயலாளர் மற்றும் மதசார்பின்மைக்கு ஆதரவாக செயல்படும் பிரபலமானவர்களை அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
04) அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட சங்க நிர்வாகிகள் பகுதி வாரியாக சென்று ஊழியர்களை சந்தித்து (முடிந்தால் இதர சங்கங்களையும் அதிகாரிகளையும் உள்ளடக்கி சென்று) BSNL வளர்ச்சிக்கு தேவையான விஷயங்களை சேகரிப்பதோடு, நாம் சிறந்த சேவைகளை தருவதின் அவசியத்தை தோழர்களிடம் எடுத்துரைப்பது.
05) தமிழகத்தில் சேவை மேம்படுத்திட மாநில தலைவர், மாநில செயலாளரோடு தோழர் S.சுப்பிரமணி ACS(நீலகிரி, கோவை ஈரோடு) தோழர் S.தமிழ்மணி ACS (சேலம் மற்றும்

தர்மபுரி), தோழர் M.முருகையா ACS (Project, கடலூர், வேலூர், பாண்டி மற்றும் கும்பகோணம்), தோழர் C.செல்வின் சத்யராஜ் ACS (மதுரை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் காரைக்குடி) மற்றும் தோழர் P.இந்திரா ACS (நாகர்கோவில், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர்) ஆகிய தோழர்களை கொண்ட ஒரு குழு அமைப்பது. அடைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் இருந்து மாவட்ட செயற்குழுக்களில் கலந்துக் கொண்டு தகவல்களை உடனடியாக திரட்டுவது. ஜனவரி முதல் வாரத்தில் இந்தக் குழு கூடி விவாதித்து மாநில நிர்வாகத்திற்கும் மத்திய சங்கத்திற்கும் ஒரு கடிதமாக கொடுப்பது.

06) தொழிற் சங்க வளர்ச்சிக்கு மண்டல வாரியான கருத்தரங்கங்களை உடனடியாக நடத்துவது என்கிற முடிவினை மே, ஜூன் மாதங்களில் நடத்துவது

07) *பெருந்திரள் மக்கள் பங்கேற்ற "தேசிய எதிர்ப்பு தினம்":- மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராக* 05.12.2014 *அன்று தேசிய எதிர்ப்பு தினத்தை கடைபிடிக்க வேண்டும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் அறை கூவல் விட்டன. நாடு முழுவதும் இந்த போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இன்று பாண்டிச்சேரி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து கிளைகளிலும்,* BSNL *அலுவலக வாயில்களில் ஆர்ப்பாட்டங்களும், மத்திய தொழிற்சங்கங்கள் நடத்திய பொதுவான இயக்கங்களிலும் நமது ஊழியர்கள் பெருந்திரளாக கலந்துக் கொண்டுள்ளனர். இந்த போராட்டத்தில் பங்கு பெற்ற அனைவருக்கும் தமிழ் மாநில சங்கம் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், இந்த கோரிக்கைகளுக்காக மேலும் நடைபெற உள்ள அனைத்து போராட்டங்களிலும் நமது பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.*

08) *நவம்பர்* 27 *வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிய அனைத்து தோழர்களுக்கும், அதற்காக உழைத்திட்ட கிளை/மாவட்ட/மாநில/அகில இந்திய சங்க தலைவர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. தமிழகத்தில் முதன்மை மாவட்டமாக* 91 *சதமான ஊழியர்களை ஈடுபடச் செய்த நீலகிரி மாவட்ட சங்கத்திற்கும், தர்மபுரி, கடலூர் மாவட்ட சங்கங்களுக்கும், மிகப்பெரிய எண்ணிக்கையில் ஊழியர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடச் செய்த கோவை மாவட்ட சங்கத்திற்கும் மாநில செயற்குழு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. இந்த வேலை நிறுத்தத்தில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு எதிர் வரும் போராட்டங்களின் தயாரிப்பு பணிகளை மாவட்ட செயற்குழுக்களில் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என்றும் முடிவு செய்தது.*

09) BSNL*ஐ புத்தாக்கம் செய்வதற்காக* FORUM *முன் வைத்துள்ள* 21 *அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நடைபெற்ற* 11.12.2014 *கோரிக்கை தின ஆர்ப்பாட்டம் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக சென்னையில் நமது தலைமை பொது மேலாளர் அலுவலகத்தின் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் இந்த கோரிக்கைகளின் மீது தோழர்களுக்கு உள்ள அக்கறையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் இந்த ஆர்ப்பாட்டம் மிகப்பெரிய அளவில் நடைபெற்றுள்ளது. பங்கேற்ற, இதற்காக பாடுபட்ட அனைத்து தோழர்களுக்கும் தமிழ் மாநில செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.*

10) *பொது மக்களிடம் ஒரு கோடி கையெழுத்துக்களை பெற வேண்டும் என்ற* FORUM*ன் முடிவை நமது தமிழகத்தில்* "SAVE BSNL- SAVE INDIA" *எனும் வாசகம் தாங்கிய* BANNER*களை எடுத்துக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி கிளைகளில் உள்ள அனைத்து*

தோழர்களையும் பங்கேற்கச் செய்து சிறப்புடன் நடத்த வேண்டும். அகில இந்திய FORUM உறுப்பினருக்கு 50 கையெழுத்துக்கள் வாங்க வேண்டும் என்று கூறியிருந்தாலும், தமிழகத்தில் அதனை 100 கையெழுத்துக்கள் என இலக்கை உயர்த்தி தமிழகத்தில் இருந்து 20 லட்சம் கையெழுத்துக்களை பெறவேண்டும் என தமிழ் மாநில செயற்குழு முடிவெடுத்துள்ளது. இதற்கான மாற்றியமைக்கப்பட்ட மனுவின் தமிழாக்கம் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதனை தோழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

11) இந்தக் கையெழுத்து இயக்கத்தை தமிழகத்தில் 11.12.2014 அன்றே துவக்கிய மதுரை மாவட்ட தோழர்களை தமிழ் மாநில செயற்குழு பாராட்டுகிறது. மதுரையில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தி அதில் தோழர் அண்ணாதுரை MLA அவர்களை வைத்து இந்த கையெழுத்து இயக்கத்தை துவக்கி உள்ளனர். திண்டுக்கல்லில் தோழர் பாலபாரதி MLA அவர்களை வைத்து துவக்கப்பட்டுள்ளது. கோவையில் தோழர் ஆறுமுகம் MLA அவர்களை வைத்தும், திருப்பூரில் தோழர் தங்கவேல் MLA அவர்களை வைத்தும் துவக்கப்பட்டுள்ளது. இதே போல தமிழகம் முழுவதும் மாவட்ட FORUMகள் பிரமாண்டமாக திட்டமிட்டுள்ளனர். இதனை எழுச்சிகரமாக, பரவலாக நடத்தி ஜனவரி 20ம் தேதிக்குள் நமது இலக்கான 20 லட்சம் கையெழுத்துக்கள் என்ற இலக்கினை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

12) இதே கோரிக்கைகளை முன்வைத்து 2015 ஜனவரி 30ஆம் தேதி தமிழ் மாநில கருத்தரங்கினை கடலூரில் நடத்துவது என்று தமிழ் மாநில FORUM முடிவு செய்துள்ளதை மாநில செயற்குழு பாராட்டுவதோடு இதில் தமிழகம் முழுவதும் இருந்து மிகப்பெரிய அளவில் ஊழியர்களை திரட்டி வெற்றிகரமாக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கு பெறக்கூடி அகில இந்திய FORUMத்தின் தலைவர்களிடம் நாம் பெற்ற 20 லட்சம் கையெழுத்துக்களை வழங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

13) ஜனவரி, 6,7 மற்றும் 8ஆம் தேதிகளில் நடைபெற உள்ள தொடர் தர்ணா போராட்டத்தை தமிழகத்தில் வெற்றிகரமாக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

14) பிப்ரவரி 25ஆம் தேதி நடைபெற உள்ள பாராளுமன்றம் நோக்கிய பேரணியில் தமிழகத்தில் இருந்து மிகப்பெரிய அளவில் பங்கேற்பது என்றும் அதற்கான திட்டமிடலை மாவட்ட சங்கங்கள் உடனடியாக செய்து பங்கேற்கும் தோழர்களின் பட்டியல் மற்றும் பயண விவரங்களை மாநில சங்கத்திற்கு ஜனவரி முதல் வாரத்திற்குள் கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

15) காலவரையற்ற வேலை நிறுத்ததிற்கான தயாரிப்பு பணிகளுக்கு கால அவகாசம் வழங்கும் வகையில் **03.02.2015** முதல் நடைபெற இருந்த கால வரையற்ற வேலை நிறுத்தத்தை **17.03.2015** முதல் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட சங்கங்கள் இந்த வேலை நிறுத்த போராட்டத்தினை நூறு சதவிகித வெற்றியாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டு அனைத்து தோழர்களையும், அதிகாரிகளையும் சந்திக்க வேண்டும். கிளைவாரியாக, அலுவலக வாரியாக, தொலை பேசி நிலையங்கள் வாரியான கூட்டங்களை **FORUM** சார்பாக நடத்தி ஆதரவினை திரட்ட வேண்டும். பாராளுமன்றம் நோக்கிய பேரணிக்கு பின்னர் மார்ச் முதல் வாரத்தில் மாநிலத் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் சிறப்புக் கூட்டங்களை அனைத்து மாவட்டங்களிலும் திட்டமிட்டு நடத்து என்றும் முடிவு செய்யப்பட்டது.

16) *வேலூர் மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்சனையில் நிர்வாகத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்ட தோழர்களில் 87 தோழர்களுக்கு மீண்டும் பணி கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக போராடிய தோழர்களுக்கும், நம்முடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை அமுல் படுத்திய தமிழ் மாநிலவேலூர் மாவட்ட நிர்வாகத்திற்கும் நமது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. மீதமுள்ள தோழர்களுக்கு பணி வழங்குவது தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது.*

17) *உறுப்பினர் சேர்ப்பு மாதமான இந்த மாதத்தில் அதிகப்படியான ஊழியர்களை நமது சங்கத்தில் இணைத்து பலப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

18) *தற்போது தமிழகத்தில் பரவலாக சிம் கார்ட் பற்றாக்குறை உள்ளது என்பதை மத்திய சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் உடனடியாக அகில இந்திய நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற மத்திய சங்கத்திற்கு நமது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. உடனடியாக தீர்வு காண நிர்வாகத்தை இந்த மாநில செயற்குழு வற்புறுத்துகிறது.*

19) *ஒரு சில மாவட்டங்களில் மாவட்ட பொது மேலாளர்கள் மேற்கொண்டு வரும் ஊழியர் விரோத BSNL விரோத நடவடிக்கைகளை வன்மையாக இந்த தமிழ் மாநில செயற்குழு கண்டிக்கிறது. மாநில நிர்வாகம் அறிவுறுத்தினாலும் அதனை ஏற்றுக் கொள்ளாமல் விதிகளுக்கு புறம்பாக செயல்படும் அந்த மாவட்ட நிர்வாகங்களுக்கு எதிராக இயக்கம் தொடர்ந்து நடத்துவது அவசியம் என்பதை சுட்டிக்காட்டிய தமிழ் மாநில செயற்குழு அவற்றிற்கெதிராக தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

***தோழர்களே, இன்று நாம் ஒரு முக்கிய கட்டத்தில் உள்ளோம். ஒரு புறம் மதவாத அபாயம் நாட்டில் நிலவி வரும் சூழலில் அதன் நிழலில் தனது கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான கொள்கைகளை அமுலாக்க மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. இந்த கால கட்டத்தில் நமது வாழ்வின் ஆதாரமாக உள்ள, பொது மக்களின் சொத்தாக உள்ள இந்த BSNL என்ற நமது கண்ணின் மணியை பாதுகாக்கும் போராட்டத்தில் நமது தோழர்களையும், அதிகாரிகளையும் திரட்டுவதுடன், சந்தாதாரகளின் பொதுமக்களின் ஆதரவையும் பெறுவதற்கான நம்மால் முடிந்த அனைத்தையும் செய்திடுவோம். நம்மால் முடியும். நம்மால் தான் முடியும். உறுதியுடன் செயல்படுவோம் என தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.***

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**